NMMS STUDY PLAN - 2022 - 23

UNIT TEST - 13 (MAT)

Prepared by : NMMS MOHAN & SASIKALA MOHAN, PUMS,

Athemcheri, Ramanathapuram Dt.

## திசைகள் சார்ந்த கணக்குகள்

1. நிவ்யா, அவள் வீட்டிலிருந்து மேற்கு நோக்கி 8 மீ நடந்தாள். பின் தெற்கு திசை திசை திரும்பி நேராக 12 மீ நடந்த பிறகு கிழக்கு நோக்கி 8 மீ தூரம் நடந்தாள். தற்போது அவள் வீட்டிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளார் ?

   (1) 8 மீ (2) 12 மீ (3) 10 மீ (4) 20 மீ

2. ஒருவர் தனது வீட்டிலிருந்து தெற்கு திசையை நோக்கி 6 கி.மீ தூரம் நடந்து சென்று, பின்னர், தனது இடது புறம் திரும்பி 5 கி.மீ தூரம் நடக்கின்றார். பின்னர், மீண்டும் இடதுபுறம் திரும்பி 3 கி.மீ தூரம் நடக்கின்றார். பின்னர், மீண்டும் இடதுபுறம் திரும்பி 9 கி.மீ தூரம் நடையைத் தொடர்கின்றார். எனில், அவர் தற்போது வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளார்?

   (1) 5 கி.மீ (2) 6 கி.மீ (3) 7 கி.மீ 4) 8 கி.மீ

3. தினஶ்ரீ மேற்கு திசையை நோக்கி நின்று கொண்டு இருக்கின்றார். அவர் கடிகார திசையில் $45^0$ திரும்பி, பின்னர் கடிகார எதிர் திசையில் $135^0$ திரும்புகின்றார். பின்னர் மீண்டும் கடிகார எதிர் திசையில் $180^0$ திரும்புகின்றார். எனில், அவர் தற்போது நோக்கும் திசை?

   (1) வடக்கு (2) தெற்கு
   (3) கிழக்கு (4) மேற்கு

4. ரூபிகா ஓரிடத்திலிருந்து கிழக்குத் திசையில் 6 கி.மீ தூரம் பயணம் செய்கின்றார். பின்னர், வலதுபுறம் திரும்பி 4 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர் மீண்டும் வலதுபுறம் திரும்பி 2 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர் மீண்டும் வலதுபுறம் திரும்பி 1 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர் இடதுபுறம் திரும்பி 8 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர், வடக்குத் திசையில் திரும்பி 3 கி.மீ தூரம் சென்று ஓய்வு எடுக்கின்றார். பின்னர், வலதுபுறம் திரும்பி, 4 கி.மீ தூரம் நடக்கின்றார். எனில், புறப்பட்ட இடத்திலிருந்து எத்திசையில் உள்ளார் ?

   (1) வடக்கு (2) மேற்கு
   (3) புறப்பட்ட இடத்தில் (4) கிழக்கு

5. ஒரு கடிகாரத்தில் 10.30 மணி என காட்டுகின்றது. நிமிட முள் வடக்குத் திசையில் இருந்தால், மணிமுள் எத்திசையில் இருக்கும்?

   (1) கிழக்கு (2) தென் கிழக்கு
   (3) வடக்கு (4) தெற்கு

LIVEWORKSHEETS

6. முகேஷ் தனது வீட்டிலிருந்து வடக்குத் திசையில் 4 கி.மீ தூரம் பயணம் செய்து, பின்னர் மேற்குத் திசையில் 3 கி.மீ தூரம் சென்று, பின்னர் தெற்குத்திசையில் 8 கி.மீ தூரம் பயணம் மேற்கொள்கின்றார். எனில், அவர் தற்போது வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் நிற்கின்றார்?

(1) 6 கி.மீ (2) 3 கி.மீ (3) 5 கி.மீ (4) 8 கி.மீ

7. ஒரு கடிகாரத்தில் 04.30 மணி என காட்டுகின்றது. நிமிட முள் தென்மேற்குத் திசையில் இருந்தால், மணிமுள் எத்திசையில் இருக்கும்?

(1) தென் கிழக்கு (2) வட கிழக்கு
(3) வடக்கு (4) தெற்கு

8. ருசிதா வடக்குத் திசையில் 8 கி.மீ தூரம் சென்று, பின்னர் தெற்குத் திசையில் 4 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர், வலதுபுறம் திரும்பி 3 கி.மீ தூரம் சென்று, பின்னர் இடதுபுறம் திரும்பி 4 கி.மீ தூரம் சென்று ஓரிடத்தை அடைகின்றார். எனில், அவர் புறப்பட்ட இடத்திலிருந்து தற்போது எவ்வளவு தொலைவில் உள்ளார்?

(1) 3 கி.மீ (2) 4 கி.மீ (3) 12 கி.மீ (4) 7. கி.மீ

9. சூரஜ் வட - கிழக்கு திசையை நோக்கி நிற்கின்றார். பின்னர், தனது இடதுபுறமாக $135^0$ திரும்பி தலைகீழாக நின்று யோகாசனம் செய்கின்றார். எனில், அவர் தற்போது நோக்கும் திசை யாது ?

(1) கிழக்கு (2) மேற்கு
(3) தென் கிழக்கு (4) தென் மேற்கு

10. வட மேற்கு என்பது கிழக்கு எனவும், தென் கிழக்கு என்பது மேற்கு எனவும், தென் மேற்கு என்பது வடக்கு எனவும்...... அழைக்கப்பட்டால், வடக்கு என்பது எவ்வாறு அழைக்கப்படும் ?

(1) தென் கிழக்கு (2) வட கிழக்கு
(3) தெற்கு (4) வட மேற்கு

11. பவித்ரன் தெற்குத் திசையில் 10 கி.மீ தூரம் சென்று, பின்னர் மேற்குத்திசையில் 5 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர், தனது பின்புறம் திரும்பி 10 கி.மீ தூரம் செல்கின்றார். பின்னர், வடக்குத்திசையில் 10 கி.மீ தூரம் பயணத்தைத் தொடர்கின்றார். எனில், அவர், தற்போது புறப்பட்ட இடத்திலிருந்து எங்குள்ளார்?

(1) 5 கி.மீ , வடக்கு (2) 5 கி.மீ, கிழக்கு
(3) 5 கி.மீ , தெற்கு (4) 15 கி.மீ, மேற்கு

12. பிருந்தா கிழக்கு திசையை நோக்கி நின்று கொண்டு இருக்கின்றார்.அவர் கடிகார எதிர் திசையில் $90^0$ திரும்பி, பின்னர் கடிகார

LIVEWORKSHEETS

திசையில் $90^0$ திரும்புகின்றார். பின்னர் மீண்டும் கடிகார எதிர் திசையில் $180^0$ திரும்புகின்றார். எனில், அவர் தற்போது நோக்கும் திசை?

(1) கிழக்கு (2) மேற்கு
(3) வடக்கு (4) தெற்கு

13. நான் தலைகீழாக நிற்கும்போது எனது முகம் கிழக்குத் திசையில் இருந்தால், எனது இடது கை எத்திசையில் இருக்கும்?

(1) கிழக்கு (2) மேற்கு
(3) வடக்கு (4) தெற்கு

14 ஒரு நாள் காலையில் சூரிய உதயத்திற்குப் பின், சசிகலா மற்றும் மணிமொழி ஆகிய இருவரும் ஒரு பூங்காவில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு பேசிக் கொண்டிருந்தனர். மணிமொழியின் நிழலானது, சசிகலாவின் வலதுபுறத்தில் விழுந்தால், மணிமொழி எத்திசையை நோக்கி நிற்கின்றார்?

(1) வடக்கு (2) தெற்கு
(3) கிழக்கு (4) மேற்கு

15. வடக்கு நோக்கி சென்று கொண்டிருக்கும் ஒருவர், மூன்று முறை இடதுபுறமாகத் திரும்பி பின் நடையைத் தொடர்கின்றார். எனில், தற்போது எத்திசையை நோக்கி செல்கின்றார்?

(1) வடக்கு (2) தெற்கு
(3) கிழக்கு (4) மேற்கு

16. எனது வீடு பள்ளிக்குத் தெற்கில் 1 கி.மீ தொலைவில் உள்ளது. எனது நண்பனின் வீடானது, எனது வீட்டிலிருந்து கிழக்குத் திசையில் 1 கி.மீ தொலைவில் உள்ளது. எனில், பள்ளிக்கு எத்திசையில் எனது நண்பனின் வீடு அமைந்துள்ளது?

(1) தென் கிழக்கு (2) கிழக்கு
(3) தெற்கு (4) வட மேற்கு

17. ஒரு நாள் காலையில் சூரிய உதயத்திற்குப் பின், இரு நபர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு பேசிக் கொண்டிருந்தனர். முதல் நபரின் முகமானது கிழக்குத் திசையில் உள்ளது. எனில், இரண்டாவது நபரின் வலது கை எத்திசையில் இருக்கும் ?

(1) கிழக்கு (2) மேற்கு
(3) வடக்கு (4) தெற்கு

18. ஒருவன் வீட்டிலிருந்து வடக்கு நோக்கி சென்று, இடப்பக்கம் திரும்பி 1 கி.மீ சென்று மீண்டும் இடப்பக்கம் திரும்பி 2 கி.மீ சென்று கோவிலை அடைகின்றான். கோவிலானது வீட்டிலிருந்து 1

LIVEWORKSHEETS

கிமீ மேற்கில் உள்ளது. எனில், அவன் வடக்கு நோக்கி எவ்வளவு தூரம் சென்றான்?

(1) 1 கி.மீ (2) 2 கி.மீ (3) 3 கி.மீ 4) 5 கி.மீ

19. இரண்டு நபர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். முதல் நபரின் முகமானது மேற்கு நோக்கி இருந்தால், இரண்டாம் நபரின் இடது கையானது எத்திசையை நோக்கி நிற்கும் ?

(1) கிழக்கு (2) மேற்கு
(3) வடக்கு (4) தெற்கு

20. ஒரு வீட்டின் கதவானது வடக்கு திசையை நோக்கி உள்ளது. அந்த அறையில் நுழைந்தவுடன், வலதுகைப்புறமாக ஒரு அறை உள்ளது. அந்த அறையில் நுழைந்தவுடன், வலதுகைப்புறமாக ஒரு சன்னல் உள்ளது. நான் சன்னலை நோக்கி நின்று கொண்டிருக்கும்போது, என் முகம் எத்திசையை நோக்கி இருக்கும்?

(1) வடக்கு (2) கிழக்கு
(3) மேற்கு (4) தெற்கு

21. ஒரு கடிகாரத்தில் 10.30 மணி என காட்டுகின்றது. நிமிட முள் வடகிழக்குத் திசையில் இருந்தால், மணிமுள் எத்திசையில் இருக்கும் ?

(1) கிழக்கு (2) வட கிழக்கு
(3) வடக்கு (4) தெற்கு

22. ஒருவன் தெற்கு திசையை நோக்கி நிற்கின்றான்.அவன் கடிகார திசையில் $90^0$ திரும்புகின்றான். பின்னர், மீண்டும் கடிகார எதிர் திசையில் $135^0$ திரும்புகின்றான். அவன் தற்போது எத்திசையை நோக்கி நிற்கின்றான்?

(1) தெற்கு (2) மேற்கு
(3) தென்கிழக்கு (4) தென் மேற்கு

23. ஒருவர் ஓரிடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட திசையில் 3 கி.மீ தூரம் சென்று, பின்னர் மீண்டும் புறப்பட்ட இடத்தை நோக்கி 5 கி.மீ தூரம் செல்கின்றார். எனில், அவர் புறப்பட்ட இடத்திலிருந்து தற்போது எவ்வளவு தொலைவில் உள்ளார்??

(1) 8 கி.மீ (2) 2 கி.மீ (3) 1 கி.மீ 4) 0 கி.மீ

LIVEWORKSHEETS

24. தென் கிழக்கு என்பது வடகிழக்காகவும், வடகிழக்கு என்பது வடமேற்காகவும் கொண்டால், வடமேற்கு என்பது ?

(1) NE (2) SW (3) SE (4) NW

25. B என்ற கிராமமானது, A என்ற கிராமத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. C என்ற கிராமமானது, B என்ற கிராமத்திற்கு கிழக்கே அமைந்துள்ளது. D என்ற கிராமமானது, A என்ற கிராமத்தின் இடதுபுறமாக அமைந்துள்ளது. கிராமம் D ஆனது C ஐப் பொறுத்து எத்திசையில் அமைந்துள்ளது?

(1) மேற்கு (2) தென் கிழக்கு

(3) தெற்கு (4) மேற்கண்ட எதுவுமில்லை

26. A, B, C மற்றும் D ஆகியோர் சீட்டு விளையாடுகின்றனர். A மற்றும் B ஆகியோர் ஒரு அணியைச் சேர்ந்தவர்கள். C மற்றும் D ஆகியோர் மற்றொரு அணியைச் சேர்ந்தவர்கள். D என்பவர் வடக்கு நோக்கியும், A என்பவர் மேற்கு நோக்கியும் அமர்ந்துள்ளனர். எனில், தெற்கு திசையை நோக்கி அமர்ந்துள்ளவர் யார்?

(1) C (2) B (3) D (4) A

27. பாலகுரு என்பவர் கிழக்கு திசையில் 10 மீ சென்று பின் வலது பக்கமாக 10 மீ சென்றார். பின் தொடர்ந்து, ஒவ்வொரு முறையும் இடப்பக்கமாக முறையே 5 மீ, 15 மீ மற்றும் 15 மீ சென்றார். ஆரம்பித்த இடத்திலிருந்து தற்போது எந்த திசையில் எவ்வளவு தொலைவில் உள்ளார் ?

(1) 10 மீ - மேற்கு (2) 10 மீ - வடக்கு

(3) 5 மீ - மேற்கு (4) 5 மீ - வடக்கு

28. ராகுல் தனது கடிகாரத்தை மேசையின்மீது வைத்தான். அப்பொழுது 6.00 A.M எனக் காட்டியது. மேலும், மணி முள் வடக்குத் திசையை நோக்கி இருந்தது. எனில், 9.15 A.M க்கு, நிமிட முள் எத்திசையை நோக்கி அமையும்?

(1) தென் கிழக்கு (2) தெற்கு

(3) வடக்கு (4) மேற்கு

29. ஒருவர் A என்ற இடத்திலிருந்து கிழக்குத் திசையில் 10 கிமீ தூரம் பயணித்து B என்ற இடத்தை அடைகின்றார். பின்னர், வடக்குத் திசையில் திரும்பி 3 கி. மீ தூரம் சென்று C என்ற இடத்தை அடைகின்றார். பின்னர், மேற்கு திசையில் திரும்பி 14 கி. மீ தூரம் சென்று D என்ற இடத்தை அடைகின்றார். எனில், A மற்றும் D ஆகியவற்றிற் கிடையேயான தொலைவு?

(1) 4 கிமீ (2) 5 கிமீ (3) 7 கிமீ (4) 10 கி மீ

LIVEWORKSHEETS

30. மதுமிதா கிழக்குத் திசையை நோக்கி நடக்கின்றார். 65 மீட்டர் நடந்தபின்னர், தனது இடதுபுறம் திரும்பி 20 மீட்டர் தூரம் நடக்கின்றார். மீண்டும் அவர் தனது இடதுபுறம் திரும்பி 30 மீட்டர் தூரம் சென்று மீண்டும் தனது இடதுபுறம் திரும்பி 20 மீட்டர் தூரம் செல்கின்றார். அவர் புறப்பட்ட இடத்திலிருந்து தற்பொழுது எவ்வளவு தொலைவில் உள்ளார்?

(1) 45 மீ (2) 35 மீ (3) 40 மீ (4) 30 மீ


Live worksheet prepared by :

P.PRABATH, PUMS, Komaliyur, Salem Dt


LIVEWORKSHEETS